# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.

முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். **501/2016**

ஆணை எண். **194/2016**

நாள் : **03/12/2016**

03/06/2016 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி. — முறையீடாக பதிவு செய்யப்பட்ட நாளிதழ் செய்தி

மண்டல அலுவலர்,
தண்டையார்பேட்டை மண்டலம்,
மண்டலம் – 4.
சென்னை மாநகராட்சி,
சென்னை – 600 021. — எதிர் மனுதாரர்

03.06.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில், "சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டல மாமன்ற உறுப்பினர் திருமதி அஞ்சலட்சுமி அலுவலகத்திற்குள் புகுந்து தாக்கமுயன்றதில் அந்த மண்டலஅலுவலர் விடுப்பு எடுத்து சென்றார்" என்ற செய்தி வெளியிடப்பட்டிருந்தது. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டப்பிரிவு 7(1)ன் கீழ், மேற்படி நாளிதழ் செய்தி குறித்து நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, 501/2016 எண்ணிட்ட முறையீட்டுமனுவாகப் பதிவு செய்யப்பட்டது. இச்செய்தி குறித்து தண்டையார்பேட்டை மண்டல அலுவலர் தாக்கல் செய்துள்ள அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

03.06.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில், "சென்னை மாநகராட்சி, தண்டையார்பேட்டை மண்டல மாமன்ற உறுப்பினர் திருமதி அஞ்சலட்சுமி அலுவலகத்திற்குள் புகுந்து தாக்கமுயன்றதில் அந்த மண்டல அலுவலர் விடுப்பு எடுத்து சென்றார்" என்ற செய்தி வெளியிடப்பட்டிருந்தது. இச்செய்தி குறித்து தண்டையார்பேட்டை மண்டல அலுவலரின் அறிக்கை பெறப்பட்டது. சென்னை மாநகராட்சி மண்டலம்–4ல் இதுபோன்ற சம்பவம் ஏதும் நடைபெறவில்லை என்றும் பத்திரிக்கையில் வெளியான செய்தி பொய்யானது எனவும் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும்

இச்செய்தி குறித்து மண்டல அலுவலர் திரு. K.B.விஜயகுமார் அவர்களிடம் 24.11.2016 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. தண்டையார்பேட்டை மண்டலத்தில் கவுன்சிலராக அஞ்சுலட்சுமி என்பவர் இருந்தார் எனவும், தான் இந்த மண்டலத்தில் 03.08.2015ம் ஆண்டு முதல் பணிபுரிந்து வருவதாகவும் இதுநாள்வரை இதுபோன்று சம்பவம் நடக்கவில்லை என்றும் விசாரணையின்போது தெரிவித்தார். மேலும், தனக்கு முன்பு மண்டல அலுவலராக பணியாற்றிய திரு. அண்ணாமலை பிரேம்குமார் அவர்களது பணிக்காலத்திலும் செய்திதாளில் குறிப்பிட்டது போன்ற சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். தினமலர் நாளிதழ்செய்தி குறித்து எந்தவித ஆதாரமும் இல்லாத நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துக்கொள்ள இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2016 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 3- ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

பெறுநர்

மண்டல அலுவலர்,
**தண்டையார்பேட்டை மண்டலம்,**
**மண்டலம் – 4.**
**சென்னை மாநகராட்சி,**
**எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,**
**சென்னை – 600 021.**

/உண்மை நகல்/

செயலாளருக்காக.